# 10 ஆம் வகுப்பு. சமூக அறிவியல். காலாண்டுத் தேர்வு-2024. சேலம்

சரியான விடை பிரிவு-1 14*1 =14

1. ஆ) ஜப்பான்
2. இ) ஹிரோஷிமா
3. ஆ) நேட்டோ
4. ஆ) 1829
5. அ) பார்சிஇயக்கம்
6. இ) இலங்கை
7. ஆ) சமமழைக்கோடுகள்
8. ஈ) கட்ச்
9. இ) சணல்
10. ஈ) கோயம்புத்தூர்.
11. ஈ. i, ii, iii சரியானவை
12. இ) தமிழ்நாடு
13. ஆ) கோல்கொண்டா சுல்தான்
14. இ. தமிழ்நாடு

சுருக்கமான விடையளிக்கவும். பிரிவு-II 10*2=20

15. சீன – ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய் ?
 - பெரிய நாடான **சீனாவைச்** சிறிய நாடான **ஜப்பான் தோற்கடித்தது**.
 - கிழக்கு ஆசியாவில் **ஜப்பான் வலிமை மிகுந்த அரசு** என நிரூபித்தது.
 - லியோடங் தீபகற்பம் மற்றும் ஆர்தர் துறைமுகத்தை ஜப்பான் கைப்பற்றியது.

16. டாலர் ஏகாதிபத்தியம் – தெளிவுபட விளக்குக.
 - **தொலை தூர நாடுகளுக்குப் பொருளாதார உதவிகள்** செய்வதன் மூலம் அவற்றின் மீது **ஆதிக்கம் செலுத்த**வும், தக்கவைத்துக் கொள்ளவும் **அமெரிக்கா** பின்பற்றியக் கொள்கையை குறிக்கிறது.

17. முதல் உலகப் போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர் ?
 - இந்தாலி – முசோலினி
 - ஜெர்மனி – ஹிட்லர்
 - ஸ்பெயின் – பிராங்கோ

18. மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.
 - மாவோவின் நீண்ட பயணம் **1934** இல் தொடங்கியது. **6,000 மைல்**களைக் கடந்தது.
 - ஒரு லட்சம் பேர் பங்கேற்றனர் **– 20,000 பேர் மட்டுமே ஷேனிப் பகுதி**யை அடைந்தனர்.

19. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை ?
 - **சதி** எனும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது.
 - **குழந்தைத் திருமணம், பலதார மணம்** ஆகியன **ஒழிக்கப்பட்டது.**

20. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
 - **நர்மதை, தபதி, மாஹி , சபர்மதி** ஆகியன மேற்கு நோக்கி பாயும் ஆறுகளாகும்.

21. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
 i. குளிர்காலம் – ஜனவரி முதல் பிப்ரவரி வரை
 ii. கோடைக்காலம் – மார்ச் முதல் மே வரை
 iii. தென்மேற்கு பருவக்காற்று காலம் – ஜூன் முதல் செப்டம்பர் வரை
 iv. வடகிழக்கு பருவக்காற்று காலம் – அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

22. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.
 - **டைட்டானியம்** மற்றும் இருப்பு தாதுக்கள் உள்ளதால் **கருப்பு நிறமாக** உள்ளது.
 - **ஈரப்பதத்தை** நீண்ட நேரம் **தக்க வைத்துக்** கொள்ளும் தன்மையும் உடையது.

www.Padasalai.Net

**23. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.**

- **இயற்கையில் இருந்து பெறப்பட்டு** உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்துமே வளம் என்று அழைக்கப்படுகிறது.
  1. புதுப்பிக்க இயலும் வளங்கள்
  2. புதுப்பிக்க இயலாத வளங்கள்

**24. தகவல் தொடர்பு என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?**

- தகவல் தொடர்பு என்பது **தகவல்கள்**, எண்ணங்கள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றின் **பரிமாற்றத்தைக்** குறிக்கிறது. தகவல் தொடர்பு இரு வகைப்படும்.
  **1. தனிமனித தகவல் தொடர்பு 2. பொதுத் தகவல் தொடர்பு.**

**25. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார் ?**

- குடியரசுத் தலைவர், **ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்** படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- இவரின் பதவிக்காலம் **5 ஆண்டுகள்.**
- வாக்காளர் குழுமம் என்பது மக்கள் பிரதிநிதிகளைக் குறிக்கிறது.

**26. ஆளுநராக நியமிக்கப்படுவதற்காக தகுதிகள் என்ன ?**

- **35 வயது** நிரம்பிய **இந்தியக் குடிமகனாக** இருத்தல் வேண்டும்.
- **நாடாளுமன்ற** அல்லது **சட்டமன்ற உறுப்பினராக** இருத்தல் **கூடாது.**
- **இலாபம் தரும் எந்த ஒரு தொழிலிலும்** ஈடுபடுதல் **கூடாது.**

**27. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கத்தை எழுதுக.**

- ✓ வேகமான வர்த்தகம், வாழ்க்கைத் தரம், வேலை வாய்ப்புகளை அதிகரித்துள்ளது.
- ✓ புதிய தொழில்நுட்பங்கள், புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகமாயின.
- ✓ மொத்த உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டின் நேரடி முதலீடு அதிகரித்துள்ளது.

**28. தமிழ்நாட்டில் உள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.**

- புரட்சி தலைவர் எம்.ஜி. ஆர். ஊட்டச்சத்து உணவுத் திட்டம்.
- ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்.
- பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்.
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.
- மதிய உணவுத் திட்டம்.

## பிரிவு-III 10*5=50

**29.கோடிட்ட இடம்**

1. கெஸ்டபோ
2. டாக்டர் சன்யாட் சென்
3. ஹைதராபாத்
4. Dr. சச்சிதானந்த சின்கா
5. வேளாண்மை

**30.பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக.**

**I. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள்:**

- சுவீடனுடன் ஏற்பட்ட பிரச்சனையில் ஆலேண்டு தீவுகள் பின்லாந்துக்குத் தரப்பட்டது.
- போலந்திற்கும் ஜெர்மனிக்கும் இடையேயான எல்லை பிரச்சனையை தீர்த்து வைத்தது.
- கிரிஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்த போது போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- 1925 இல் லொக்கர்னோ உடன்படிக்கை ஐரோப்பாவில் அமைதி ஏற்பட வழிவகுத்தது.

**II. அதன் தோல்விக்கான காரணங்கள்:**

- இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் – சங்கத்தின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்தன.
- அமெரிக்கா பன்னாட்டு சங்கத்தின் உறுப்பினராகச் சேராமல் தனித்து இருந்தது.
- பன்னாட்டு சங்கத்தின் முடிவுகளை செயல்படுத்த தனியாக ராணுவம் இல்லை.
- முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாக சங்கம் இருந்து.

www.Padasalai.Net

**31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.**

- அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் தலைமையில் உலகம் இரு துருவங்களானது.
- கம்யூனிச நாடுகள், கம்யூனிசமில்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாக பிரிந்தது.
- அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போட்டியிட்டு அனு ஆயுதங்களை குவித்தன.
- பேரழிவு தரும் ஆயுதங்களை தயாரிக்க உலக நாடுகள் பெருமளவு செலவு செய்தன.
- கட்டாயத்தின் பேரில் இந்தியா உட்பட பல காலனி நாடுகள் விடுதலை பெற்றன.
- ஐ.நா. சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் நிறுவப்பட்டன.
- பன்னாட்டு முகமைகள் பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்குப் பொது இடமாக இருந்தன.
- அதிகமான பெண்கள் உழைப்பாளர்களாகி பொருளாதார ரீதியான சுதந்திரம் பெற்றனர்.

**32. 19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.**

- ✓ சதி எனும் உடன்கட்டை ஏறும் வழக்கம் – விதவைகளை உயிரோடு எரித்து கொல்லுதல்.
- ✓ பலதார மணம் – ஆண்கள் பல பெண்களை திருமணம் செய்து கொள்ள அனுமதித்தனர்.
- ✓ குழந்தைத் திருமணம் – ஒன்றும் அறியாத வயதிலேயே திருமணம் செய்து வைத்தனர்.
- ✓ கைம்பெண் வழக்கம் – விதவை பெண்களின் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டன.
- ✓ பெண் கல்வி மறுப்பு – பெண்கள் பள்ளி சென்று கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது.
- ✓ சாதி முறை – ஒடுக்கப்பட்டவர்கள் மீது சாதிக் கொடுமைகள் அதிகமாக காணப்பட்டது.
- ✓ மூடநம்பிக்கைகள் – பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்திட பல சடங்குகளை நடத்தினர்.
- ✓ கல்வி மறுப்பு – பிராமணர்கள் மட்டுமே கல்வி பயின்றனர் மற்றவர்களுக்கு மறுக்கப்பட்டது.

**33. வேறுபடுத்துக. 1. வானிலை மற்றும் காலநிலை:** ( ஏதேனும் 2 மட்டும்)

| வானிலை | காலநிலை |
|---|---|
| i) ஓர் இடத்தின் குறுகிய கால வளிமண்டல நிலையைக் குறிப்பது. | ஒரு பகுதியின் நீண்டகால வானிலை சராசரியைக் குறிப்பது. |
| II) குறுகிய காலத்தில் ஏற்படும் வெப்பம், காற்று, மழை, மேகமூட்டம், வறட்சி, சூரிய ஒளி, ஆகியவற்றை குறிக்கிறது. | 30 முதல் 35 ஆண்டுகள் வரை ஏற்படும் வானிலையை மாற்றத்தைக் குறிக்கிறது. |
| III) தினமும் மாறக் கூடியது | மாறாதது |
| IV) ஒரு நாளின் தட்பவெப்பநிலை | 35 வருட சராசரி தட்பவெப்பநிலை |

**II. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்:** ( ஏதேனும் 2 மட்டும்)

| உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|
| ஒரு நாட்டின் எல்லைக்குள் மட்டுமே நடைபெறும் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் |
| உள்நாட்டு பணம் / நாணயம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | அந்நிய நாட்டு பணம் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. |
| சாலை, ரயில்பாதை போக்குவரத்து மூலம் நடைபெறுகிறது. | நீர்வழி, வான்வழி போக்குவரத்து மூலம் நடைபெறுகிறது. |

**காரணம் கூறுக. (1 மார்க் )**

**1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு:**

- * இந்தியாவில் வேளாண்மை **50 சதவீதத்திற்கும்** அதிகமான மக்களுக்கு **வேலை வாய்ப்பும்**
- * நாட்டின் மொத்த **வருமானத்தில் 25 சதவீதமும்** அளிக்கிறது.

**34. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

**I. தீபகற்ப ஆறுகள்:**

* தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன.
* தீபகற்ப ஆறுகள் பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

**II. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்:**

* மகாநதி – சத்தீஸ்கார் மாநிலத்தில் உற்பத்தியாகி ஒடிசா வழியாக பாய்கிறது.
* கோதாவரி – மகாராஷ்ட்ராவில் உற்பத்தியாகி ஆந்திர பிரதேசம் வழியாக பாய்கிறது. இது விருத்தகங்கா என்று அழைக்கப்படுகிறது.
* கிருஷ்ணா – மகாராஷ்ட்ராவில் உற்பத்தியாகி ஆந்திர பிரதேசம் வழியாக பாய்கிறது.
* காவேரி – கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தியாகி தமிழ்நாடு வழியாக பாய்கிறது. இது தென் இந்தியாவின் கங்கை என்று அழைக்கப்படுகிறது.

**III. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்:**

* நர்மதை – மத்திய பிரதேசத்தில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.
* தபதி – மத்திய பிரதேசத்தில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.

**35. இந்திய மண் வகைகளைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.**

**i) வண்டல் மண்:**

பண்புகள் – வண்டல் படிவு, சுண்ணாம்பு மற்றும் களிமண் போன்ற கலவைகளுடன் காணப்படுகிறது.

பரவல் – உத்திரப்பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம், பீகார்.

**ii) கரிசல் மண்:**

பண்புகள் – ஈரமாக இருந்தால் சேறாக மாறும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைக்கும்.

பரவல் – மகாராஷ்டிரா, கத்தியவார் தீபகற்பம், மாளவப் பீடபூமி, தெலுங்கானா, ராயல்சீமா.

**iii) செம்மண்:**

பண்புகள் – மென்துகள்கள், உப்புக்கரைசல், வெண்களிப் பாறைத் தாதுக்கள் உடையது.

பரவல் – தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஜார்கண்ட், சோட்டா நாகபுரி பீடபூமி.

**iv) சரளை மண்:**

பண்புகள் – உயரமான பகுதியில் காணப்படும் அமிலத் தன்மை அதிகம், ஈரப்பதத்தை தக்க வைக்காது.

பரவல் – அசாம் குன்றுகள், ஒடிசா, மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம்.

**v). காடு மற்றும் மலை மண்:**

பண்புகள் – மென்மையான மணல் மற்றும் பாறைத் துகள்கள் கலந்து காணப்படுகிறது.

பரவல் – இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், ஜம்மு – காஷ்மீர்.

**vi) வறண்ட பாலை மண்:**

பண்புகள் – குறைந்த ஈரத் தன்மை, குறைந்த இலைமக்கு சத்து, வெளிர் நிறம் உடையது.

பரவல் – இராஜஸ்தான், வடக்கு குஜராத், தெற்கு பஞ்சாப்.

**vii) உப்பு மற்றும் கார மண்:**

பண்புகள் – சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது.

பரவல் – ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்ரா, இராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம்.

**viii) களிமண் மற்றும் சதுப்பு நிலம்:**

பண்புகள் – அதிக ஈரத் தன்மை, அதிக இலைமக்கு சத்து, கருமை நிறம் உடையது.

பரவல் – ஒடிசா, பீகார், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கேரளாவில் கோட்டயம், ஆலப்புழை.

**36. இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.**

* மின் பற்றக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்
* தொழிலகங்கள் நிறுவுவதற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை
* கடன் பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்
* கடனுக்கான அதிக வட்டி விகிதம்
* மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை
* ஊழியர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி இல்லாமை
* தொழிற்பேட்டைகளுக்கு அருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை

**37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**

**இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்:**

- உலகின் மிக நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பாக அமைந்துள்ளது.
- இது பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளில் இருந்து பெறப்பட்டவை.
- நெகிழும் தன்மை மற்றும் நெகிழாத் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- மத்தியிலும் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைக் கொண்டுள்ளது.
- ஒற்றை குடியுரிமை மற்றும் சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- இந்தியா சமயச் சார்பற்ற, கூட்டாச்சி முறை அரசாங்கம் உள்ள நாடாகும்.
- வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சலுகைகள்.

**38. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை ?**

- அமைச்சர்களின் நிலையை அறிந்து அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்வது.
- தனது அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி மற்றும் நிகழ்ச்சி நிரல் பற்றி முடிவு செய்வது.
- குடியரசுத் தலைவருடன் மத்திய அரசு விவகாரம், சட்ட முன்மொழிவுகள் விவாதித்தல்.
- குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாகச் செயல்படுகிறார்.
- நாட்டின் உண்மையான தலைவராகவும், செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- காமல்வெல்த், அணிசேரா நாடுகள் மற்றும் சார்க் நாடுகள் மாநாடுகளில் பங்கேற்றல்.
- கேபினெட் கூட்டம் நடைபெறாத போது மூத்த அமைச்சர்களை கலந்தாலோசித்தல்.
- அமைச்சரவையின் தலைவராக பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

**39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.**

**I. மொத்த நாட்டு உற்பத்தி:**

❖ மொத்த நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் மக்களால் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**II. மொத்த உள்நாட்டு உற்பத்தி:**

❖ மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**III. நிகர நாட்டு உற்பத்தி** :நிகர நாட்டு உற்பத்தி என்பது மொத்த நாட்டு உற்பத்தியில் இருந்து மூலதனத் தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பாகும்.

**IV. நிகர உள்நாட்டு உற்பத்தி:**

❖ நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து மூலதனத் தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பாகும்.

**V. தலா வருமானம் / தன நபர் வருமானம் :**

❖ தலா வருமானம் என்பது நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் கிடைக்கின்ற மதிப்பாகும்.

**VI. தனிப்பட்ட வருமானம்:**

❖ தனிப்பட்ட வருமானம் என்பது தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களில் இருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானமாகும்.

**VII. செலவிடத் தகுதியான வருமானம்:**

❖ செலவிடத் தகுதியான வருமானம் என்பது தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானமாகும்.

**40. பொது விநியோக முறையை விவரிக்கவும்**

- தமிழ்நாடு "உலகளாவிய பொது வழங்கல் முறை"யை(Universal PDS) ஏற்றுக் கொண்டது.
- ஆனால் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை" (Targeted PDS) செயல்பாட்டில் இருந்தது.
- உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப உணவு பொருள் வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறை மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகிறது.
- ஆனால், இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது,
- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் பொருள்களுக்கு மானியம் அளிக்கின்றன.
- மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது.
- தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம் (National Food Security Act) இந்திய நாடாளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது.
- இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும்.
- இந்த குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் (Priority Households) என அழைக்கப்படுகின்றன.

## 41.காலக்கோடு

1910 - தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்

1912 - முதல் பால்கன் போர்

914 - முதலாம் உலகப் போர்தொடக்கம்
1917 - ரஷ்யப் புரட்சி

1918 - முதல் உலகப் போர்முடிவு

1919 - பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920 - பன்னாட்டு சங்கம் தோற்றம்

1922 - முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு

1927 - வியட்நாம் தேசியக்கட்சி உதயம்

1929 - பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1933 - ஹிட்லர்ஜெர்மனியின் சான்சிலர்(முக்கிய அமைச்சர்) ஆதல்

1934 - நீண்டபயணம்

1935 - முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது


1938 - மியூனிச் உடன்படிக்கை

1939 - இரண்டாம் உலகப் போர்தொடக்கம்

1930 -முதல் வட்ட மேசை மாநாடு
1931 - இரண்டாம் வட்ட மேசை மாநாடு
1932 - மூன்றாம் வட்ட மேசை மாநாடு

**42. உலக வரைபடம் 5*1=5**

- சான்பிரான்சிஸ்கோ
- ஜெர்மனி
- இத்தாலி
- ஜப்பான்
- சீனா




www.Padasalai.Net

பிரிவு- IV 2*8=16

**43. அ)ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

- 1919 இல், ஹிட்லர் உட்பட ஏழு பேர் நாசிசக் கட்சியை நிறுவியது.
- யூதர்களுக்கு எதிரான ஒரு வன்முறைசார் அரசியலை வளர்த்தார்.
- முதல் உலகப் போரின் போது சிறப்பாக பணியாற்றினார்.
- தேசியப் புரட்சியை நடத்திய குற்றத்திற்காக சிறைக்கு சென்றார்.
- சிறையில் இருந்த போது மெயின் காம்ப் நூலை எழுதினார்.
- 1932 இல் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர்.
- முதலாளிகள் நாசிசத்தை ஆதரித்தனர்.
- ஹிட்லர் தவறான வழியில் ஜெர்மனியின் அதிகாரத்தைப் பிடித்தார்.

**43. ஆ)பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.**

**I. இராஜா ராம் மோகன் ராய்:**

- ✓ சதி வழக்கம், குழந்தை திருமணம், பலதார மணம் ஆகியவற்றை எதிர்த்தார்.
- ✓ ஆண்களைவிட பெண்கள் கீழானவர்களாக நடத்தும் நடைமுறையை எதிர்த்தார்.

**II. ஈஸ்வர சந்திர வித்யசாகர்:**

- ✓ குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.
- ✓ பெண் கல்வியை மேம்படுத்த பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவினார்.

**III. கேசவ சந்திர சென்:**

- ✓ குழந்தை திருமண முறைக்கு எதிராக கடுமையாக போராடிக் கொண்டிருந்தார்.

**IV. எம்.ஜி. ரானடே:**

- ✓ விதவைகள் மறுமணம் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தார்.

**V. சுவாமி தயானந்த சரஸ்வதி:**


- ✓ குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.

**VI. ஜோதிபா பூலே:**

- ✓ விதவைகள் மறுமணம் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தார்.
- ✓ விதவைகள் மறுமணம் மற்றும் பெண்களின் கல்வி மேம்பாட்டுக்காக போராடினார்.

www.Padasalai.Net


## 44. இந்திய வரைபடம் 8*1=8




388-30—1a

1

# INDIA MAP - OUTLINE




388-30—1a

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com